# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)

**2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் 2017, மே மாதம் 25 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, மாச்சு மாதம் 06 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

**[ 180 ஆம் சட்டமூலம் ]**

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டத்தைத் திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, பொலிசுக் கட்டுக்காப்பிலுள்ள ஆளொருவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணியொருவரின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)

ச. வ. ஓ 3/2017

### *2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2.** இரண்டாயிரத்துப் பதின்மூன்றாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"பொலிசுக் கட்டுக்காப்பிலுள்ள ஆளொருவரை அணுகுவதற்குச் சட்டத்தரணியொருவருக்குள்ள உரிமை.*

6அ. (1) இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பொலிசுக் கட்டுக்காப்பிலுள்ள ஆளொருவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணியொருவர், அத்தகைய ஆள் கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்ட நேரத்திலிருந்து, பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரை சந்தித்து அத்தகைய அலுவலருக்கு முறையீடுகளைச் செய்யும் நோக்கத்துக்காக, அத்தகைய ஆள் எந்தப் பொலிசு நிலையத்தில் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுகின்றாரோ அப் பொலிசு நிலையத்துக்கான அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) பொலிசு நிலையத்துக்கான அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கும் முறையீடுகளைச் செய்வதற்கும் சட்டத்தரணியொருவருக்குள்ள உரிமை, பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற ஆள் தொடர்பில் நடாத்தப்படக்கூடிய புலனாய்வுகளைப் பாதித்தலாகாது.

2-PL 005049 - 475 (2017/02)

(3) அத்தகைய எவரேனும் சட்டத்தரணி அத்தகைய பொலிசு நிலையத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பொலிசு நிலையத்தைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களினால் அவர் உளப்பூர்வமாகவும் நயமாகவும் நடாத்தப்படுதலும், நியாயமானதும் பொறுமையானதுமான கேட்பு அவருக்கு அளிக்கப் படுதலும் வேண்டும்.

(4) அத்தகைய எவரேனும் சட்டத்தரணி, பொலிசுக் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்பட்ட ஆளின் சார்பில், பொலிசு நிலையத்துக்குப் பொறுப் பாகவுள்ள அலுவலரைச் சந்திப்பதற்கும் பின்வரும் தகவல்களை அத்தகைய அலுவலரிடமிருந்து நிச்சயித்துக்கொள்வதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆளினால் புரியப்பட்டுள்ள தெனச் சார்த்தப்பட்ட தவறு;

(ஆ) அத்தகைய ஆள் கைதுசெய்யப்பட்ட தேதியும், நேரமும், இடமும்;

(இ) அத்தகைய ஆளை நீதிவானொருவர் முன்னர் நிறுத்திய தேதியும், அண்ணளவான நேரமும், இடமும் ; அத்துடன்

(ஈ) எந்த வேறெவையேனும் தகவல்களை வெளியிடுதல், மேற்கொண்ட புலனாய்வு களின் நடாத்துகையையும் நீதிநலன் களையும் பாதகமானமுறையில் பாதிக்க மாட்டாதோ அந்த வேறெவையேனும் தகவல்கள்.

(5) அத்தகைய எவரேனும் சட்டத்தரணி பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அத்தகைய ஆளின் சார்பில் முறையீடுகளைச் செய்தல் ; அத்துடன்

(ஆ) 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி அத்தகைய ஆளுக்காகப் பிணையளிப்பதனை நாடி, பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல்.

(6) அத்தகைய சட்டத்தரணி அவ்வாறு கோரினால், கட்டுக்காப்பிலுள்ள ஆளுக்கான அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கு, அத்தகைய அணுக்கம் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் புலனாய்வுக்குப் பங்கம்விளைவிப்பதாக இருந்தாலொழிய அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(7) அத்தகைய சட்டத்தரணி முறையீடுகளை அல்லது (5) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து, அத்தகைய அலுவலர்-

(அ) அவ்வாறு செய்யப்பட்ட முறையீடுகளின் பதிவொன்றைச் செய்தல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய முறையீடுகளுக்கு உரிய கவனஞ் செலுத்துதல் வேண்டும் ; அத்துடன்

(இ) பிணை நாடுகின்ற அத்தகைய விண்ணப்பத்தை அனுமதிப்பதற்கான அல்லது மறுப்பதற்கான காரணங்களைப் பதிதல் வேண்டும்.

(8) பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒவ்வொருவரும், இப்பிரிவின்கீழ் சட்டத்தரணியொருவரினால் செய்யப்பட்ட முறையீடுகளை ஏற்றுக் கவனிப்பதற்கான நிலைமையில் இராதிருப்பின், அத்தகைய முறையீடுகளை ஏற்றுக் கவனிப்பதற்குப் பொருத்தமான பொலிசு அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும்.

(9) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்" என்னும் சொல்லமைப்பு, பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அத்தகைய அலுவலரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேறெவரேனும் பொலிசு அலுவலரையும் உள்ளடக்கும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*